# திருமலைத்தீபம்
Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 34
விலை 20/=

கார்த்திகை இதழ் - 2016, ஆரம்பம் 15 மாசி - 2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம் - 34
E-mail- catetcota@gmail.com
T.P- 026 2221022, 0263202532


## அகமகிழ்வுடன் ஆண்டவரின் இல்லத்திற்கு போவோம்



## மறைமாவட்ட ஆயரின் செய்தி

கிறிஸ்து இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,

நவம்பர் மாதம் என்றாலே இறந்த விசுவாசிகள் எமது நினைவுக்கு வரும். எமது திருச்சபையின் பாரம்பரியத்தில் நவம்பர் மாதம் 02ம் நாள் இறந்த விசுவாசிகளுக்காக செபிக்கும் நாளாகும். சேமக்காலையில் திருப்பலி நிறைவேற்றி, இறந்த விசுவாசிகளுக்காக செபித்து கல்லறைகளையும் ஆசீர்வதிப்பதுண்டு. மக்களும் திரளாக சேமக்காலைக்கு வந்து செபிப்பார்கள். எமது மறைமாவட்டத்தில் வழமை போல நவம்பர் 02ம் திகதிக்குப் பின்வரும் திங்கட்கிழமை தூயமரியாள் பேராலயத்தில் எமது மறைமாவட்டத்தில் பணியாற்றி இறந்த ஆயர்கள். குருக்கள். துறவிகள், பொதுநிலையினருக்காக ஆயர் தலைமையில் விசேட திருப்பலி நடைபெற்றது. பலகுருக்கள் இதில் கலந்துகொண்டனர்.

இரக்கத்தின் ஆண்டு நிறைவுக்கு வந்துள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் 2015. 08 டிசம்பர் தொடங்கி வைத்த இரக்கத்தின் ஆண்டிற்கான விசேட செயல்பாடுகள் நவம்பர் மாதம் 20ம் திகதி நிறைவுக்கு வந்தன. இவ்வருடம் நாம் அனுபவித்த இரக்கத்தை தொடர்ந்து வாழ்ந்து காட்டவேண்டும். இதை அடையாளப்படுத்த நவம்பர் 13 ஞாயிறுகாலை 6.45 மணிக்கு பேராலயத்தில் சிறப்பத் திருப்பலி நடைபெற்றது. நவம்பர் 20ம் திகதி உவர்மலையில் சிறப்பு நிகழ்ச்சி மறைமாவட்ட சமூகத் தொடர்பாடல் ஆணைக் குழுவினால் நடாத்தப்பட்டது. அலைஓசை கலைக் குழுவினால் இரக்கத்தின் ஆண்டை மையமாக வைத்து நடாத்தப்பட்ட போட்டிகள், நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இது அமைந்துள்ளது. இயக்குனர் அருட்தந்தை றொகான் பேனாட் அவர்களையும் கலைக்குழ அங்கத்தவர்களையும் பாராட்டுகின்றேன்.

எதிர்வரும் ஆண்டை மையமாகக் கொண்டு சில கருத்தரங்குகள் நடைபெற்றன. அக்டோபர் 22ம் திகதி குடும்ப அப்போஸ்தலத்துவம் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. இதைத் தொடர்ந்து நவம்பர் மாதம் 5ம் திகதி கல்வி மற்றும் சமூகப்பணி பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. இதன் விளைவாக ஒவ்வொரு பங்கிலும் கல்விக்கான தனிக குழுவும் சமூகப்பணிக்கான தனிக்குழுவும் உருவாக்கப்பட்டு இயங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மறைமாவட்டத்தில் எமது மாணவர்கள் கல்வியில் சிறப்பாக முன்னேற வேண்டும். இவர்களுடைய கல்வி. கல்விக்கான வளங்களை உருவாக்குதல், தேவைகளை இனம் கண்டு மாணவர்களை உற்சாகப்படுத்துதல் போன்றன கல்விக் குழுவின் பணியாக இருக்கும். அதேபோல் ஒவ்வொரு பங்கிலும் வறியவர்கள். தேவையில் இருப்பவர்களை இனம் கண்டு அவர்களை உயர்த்திவிடுவதற்கான வழிகளைத் தேடி செயல்படுவது சமூகப் பணிக்கான குழுக்களின் பணியாகும்.

**2017ம் ஆண்டுக்கானதலைப்புக்களைநாம் தீர்மானித்துள்ளோம். அவை:**
1. புனித யோசப் வாஸ் ஆண்டு
2. புனித மத்தேயு நற்செய்தி ஆண்டு
3. குடும்ப அப்போஸ்தலத்துவம்.

இத்தலைப்புகளின் பின்னணியில் அடுத்த வருடம் உரிய ஆணைக் குழுக்கள் வகுக்கும் திட்டங்கள் பற்றி ஆராய 21ம் திகதி திங்கட்கிழமை ஆணைக் குழுக்களின் இயக்குனர்களுக்கான சிறப்புக்கூட்டம் நடைபெற்றது.

நவம்பர் 26ம் திகதி மறைமாவட்ட மேய்ப்புப்பணிக் கூட்டம் நடைபெறும். இதில் அடுத்த ஆண்டுக்கான திட்டங்கள் அறிவிக்கப்படும். திருத்தியமைக்கப்பட்ட மறைமாவட்ட, பங்குமேய்ப்புப் பணிச் சபைகளின் யாப்புமுறையாக இக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்படும்.


நவம்பர் மாதம் 20ம் திகதி பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த இரண்டு குருக்கள் மூதூர் பங்கைப் பொறுப்பேற்றார்கள். தமிழ் நாட்டில் அமைதி அரச மறைமாநிலத்தைச் சேர்ந்த கப்புச்சின் குருக்கள் என அழைக்கப்படும் இக்குருக்கள் மூதூர் பங்கின் வளர்ச்சிக்காக தங்களை அர்ப்பணிப்பார்கள். ஆன்மீகம், கல்வி, சமூகப்பணி என இவர்களது பணி எல்லா மக்களையும் சென்றடையும். அன்றைய தினத்தை சிறப்பிக்க அமைதி அரசி மறைமாநில அதிபர் அருட்தந்தை யோன் அருமைநாதன் அடிகளும் அருட்தந்தை கிறிஸ்டோபர் அடிகளும் வந்திருந்தார்கள். மூதூரில் இவர்களது பணி சிறக்கவாழ்த்துகிறேன்.

நவம்பர் 29 முதல் டிசம்பர் 04 வரை நீர்கொழும்பில் ஆசிய ஆயர் பேரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது. பல நாடுகளிலிருந்து விசேடமாக ஆசிய நாடுகளிலிருந்து 100க்கும் அதிகமாக ஆயர்களும் பிரதிநிதிகளும் வருகைதரவுள்ளனர். இக்கூட்டம் பயனுள்ளதாக அமைய செபிப்போம்.

டிசம்பர் மாத இதழில் 2017ம் ஆண்டுக்கான மேலதிக விபரங்களோடு சந்திக்கிறேன்.

இறைவனின் ஆசீர் எப்போதும் உங்களைக் காப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்
அதி.வந்.கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்.
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்




## இரக்கத்தின் யூபிலி ஆண்டு நிறைவுத் திருப்பலி






இரக்கத்தின் யூபிலி ஆண்டு நிறைவுத் திருப்பலி தூய மரியாள் பேராலயத்தில் 13.11.2016 அன்று காலைத் திருப்பலியில் சிறப்பிக்கப்பட்டது இத்திருப்பலியை எமத மறைமாவட்ட ஆயர் அதி.வந்.கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியில் அனைத்து இறைமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

## நாங்கள் வழங்கும் கனி




திருகோணமலை மறைமாவட்டம் தனியாக பிரிக்கப்பட்டு நான்கு வருடங்கள் ஆகும் நிலையில் எமத மண்ணில் இருந்து முதற்கனியாக எமர்சன் ராகல் என்பவர் களுத்துறை பெரிய குருமடத்திற்கு அனுப்பப்பட்டார்......

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வல்லவரே உம் செயல்கள் வியப்புக்குரியன

# உங்களோடு பேசுகிறேன்..

**அருட்பணி N.C அருள்வரதன்**

மீண்டும் உங்களோடு பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது எனக்கு மகிழ்வை ஊட்டுகின்றது. கார்த்திகை மாதம் வருட முடிவுக்கு முந்திய மாதம்.

இம்மாதத்தின் முதலாம் நாளிலே சகல தூயவர்களின் தினம் கொண்டாடப்படுகின்றது. இரண்டாம் திகதி சகல இறந்த ஆன்மாக்களின் நாள் சிறப்பிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வீட்டிலும் ஏதோ வகையில் இறந்தவர்கள் இருப்பார்கள். நமது பிரிவுகளை நினைவிற் கொள்ள வேண்டும். அவர்களை நாம் மறந்துவிட முடியாது. அவர்களின் ஆன்மா இளைப்பாற்றிக்காக வேண்டி நிற்போம்.

மேலும் இம்மாதம் 7ம் திகதி மறைமாவட்டத்திலே பணியாற்றி மறைந்து போன ஆயர்கள் குருக்கள் அருட் சகோதர சகோதரிகளின் நினைவாக மரியாள் பேராலயத்தில் மறைமாநில ஆயரின் தலைமையில் திருப்பலி நிறைவேறறப்பட்டது. குருக்கள் அருட்சகோதர சகோதரிகள் பெருமளவில் கலந்து கொண்ட போதும் பொது நிலையினரின் பங்களிப்புநிறைவு தரவில்லை.

மேலும் இம்மாதத்திலே கிறிஸ்து அரசர் விழா இவ் விழாவினை கன்னியா இறைமக்கள் இத் திருவிழாவைக் கொண்டாடுகின்றார்கள் விழாவைச் சிறப்பிக்கும் அனைத்து மக்களுக்கும் எமது ஆசீரும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

இத்தினத்தோடு அதாவது கிறீஸ்து அரசர் பெருவிழா ஞாயிரோடு பொதுக்காலம் நிறைவடைந்து திருவருகைக் காலம் ஆரம்பமாகின்றது.

மேலும் இம்மாதத்திலே அருட்பணியாளர்கள் ஐ. ஜூட் சர்வானந்தன், அல்பிரட் கபிரியேல் யே.ச, இவர்கள் தங்கள் குருத்துவ நாளைக் கொண்டாடுகின்றார்கள். தொடர்ந்தும் இவர்களின் பணிவாழ்வு சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

இம்மாதம் 20ம் திகதி 'சர்வதேச சிறுவர் உரிமைகள்' தினமாகும். இன்று சிறுவர்களின் நிலைகளையும் வாழ்விக்கப்படும் முறைகளையும் கொடுமைகளுக்கு உட்புகுத்தப்படும் கேவல நிலைகளையும் நோக்கும் போது சிறுவர் துர்ப்பிரயோகங்கள் மேலோங்கிக் கிடப்பது வெட்கிதலைகுனிய வேண்டிய விடயமாக உள்ளது. இத்தினத்திலே சிறுவர்களின் வாழ்வு நிலைகள் சிதைவுறாமல் சிறப்பு நிலைகளையும் வாழ்வின் வழுங்களையும் காண்பதற்கு அனைத்து நிலைகளும் திறப்பட செயலாற்ற முன்வர வேண்டுகின்றோம்.

இன்றைய அரசியலை நோக்கும் போது பல கோணங்களிலே பிளவுகள் உண்டாகி இருப்பதை உணர முடிகின்றது. மக்கள் பணி மக்களை காக்கும் பணி மக்களுக்காக ஏற்றபணி என்னும் நிலைகள் மாறுபதவி~களைப் பற்றிப்பிடிக்கும் உணர்வுகளோடு அராஜக நிலைகளை வெளிக்கட்டி நிற்கும் சில அரசியல்வாதிகளின் பிற்போக்கான சிந்தனைகள் செயற்பாடுகளும் வேதனையூட்டி நிற்கின்றன.

இப்படியான பிற்போக்கான சிந்தனைகள் மாற்றம் பெற்று உள்ளங்களில் நல்லவைகள் உதயமாகிப் பணிகளை மேற்கொள்ள வேண்டி நிற்போம்.

வருடம் முடிவுற இடையே ஒருமாதம் அனைத்து நிலைகளும் புத்துயிர் பெறவும் புது வளங்கள் காணவும் வற்றாத நிலைகளினால் வசந்தங்கள் துலங்க வேண்டி மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்.



# வறியோர், நோயுற்றோரைத் தேடிச் செல்வதை நிறுத்த வேண்டாம்

இரக்கத்தின் யூபிலி நிறைவு பெற்றாலும், வறியோர், நோயுற்றோர், மற்றும் ஆன்மீகத் தேவைகளில் இருப்போர் ஆகியோரைத் தேடிச் செல்வதை நாம் நிறுத்த வேண்டாம் என்று, அமெரிக்க ஐக்கிய நாட்டு பேரவையின் புதியத் தலைவர் கர்தினால் டேனியல் தினார்தோ அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆயர் பேரவைத் தலைவர் என்ற முறையில் கர்தினால் தினார்தோ அவர்கள் இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் இறுதியில் மடல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இரக்கத்தை வெளிப்படுத்தும் செயல்பாடுகள் இவ்வுலகில் தொடர வேண்டும் என்பதை வலியுறுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள "இரக்கமும் அவலநிலையும்" என்ற திருத்தூது மடல் நம்மை தூண்டுகிறது என்று கர்தினால் தினார்தோ அவர்கள் இம்மடலில் கூறியுள்ளார்.

கிறிஸ்துவின் இரக்கம் நிறைந்த இதயம் அனைத்து பாவங்களையும் மன்னிக்க வல்லது என்ற உணர்வை இந்த யூபிலி ஏற்படுத்தியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டிய கர்தினால் தினார்தோ அவர்கள் இரக்கத்தின் ஆண்டு இனி இரக்கம் நிறைந்த வாழ்வாக மாற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**ஆதாரம் வத்திக்கான் வானொலி**

# இரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வுசமூகம் ஆன்மீக சமூக பணிகளுக்காக நடாத்திய அதிஸ்ட லாபசீட்டிழுப்பின் குலுக்கல் நிகழ்வு

மேற்படி நிகழ்வானது 03. 11. 2016 ம் திகதி பி.ப 5.00 மணிக்கு திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இயேசு சபை முன் சன்னியாச இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவந்.கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் கலந்து கொண்டதுடன் சிறப்பு அதிதிகளாக குவாடலூப்பே அன்னை ஆலய பங்குத்தந்தை அருட்பணி. ஜெயபாலன் அ.ம.தி அடிகளாரும், திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகத்தின் ஆன்மீக இயக்குனர் அருட்பணி. ஜே. அனிஸ்ரன் மொறாயஸ் அடிகளாரும், கௌரவ அதிதிகளாக திரு. செல்வபுத்திரன், திரு. ஏ.ஏ. பாக்கியநாதன் குரூஸ் ஆகியோரும் கிறிஸ்தவ வாழ்வு சமூக உறுப்பினர்களும் பங்குபற்றினர். இந்நிகழ்வினை மெருகூட்ட கிறிஸ்தவ வாழ்வுசமூக உறுப்பினர்களின் பிள்ளைகளால் கலைநிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரக்கத்தின் ஆண்டை மையப்படுத்தி திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வுசமூகம் தனது ஆன்மீக சமூகபணிகளை மேற்கொள்ளும் முகமாக 20 ரூபா பெறுமதியான அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு டிக்கட்டுக்களை, கிறிஸ்தவ வாழ்வுசமூகம் இயங்கும் பங்குகளிலும் ஏனைய பங்குகளிலும் கடந்த 03 மாதகாலமாக விற்பனை செய்தது. அதன்மூலம் கிடைக்கும் நிதியினைக் கொண்டு இரக்க செயல்களில் விரைவில் ஈடுபடவுள்ளது.

இச்சீட்டிழுப்பில் வெற்றி பெற்றோரின் விபரங்கள் பின்வருமாறு

01ம் பரிசு – **Table Fan** – க . கஜந்தினி ( ஆசிரியை ), அந்தோனியார் மகாவித்தியாலயம் , மூதூர்
02ம் பரிசு – **Toaster** – பாலா ஸ்ரோர்ஸ் , 280 நீதிமன்றவீதி, திருகோணமலை
03ம் பரிசு – **Iron Box** - சு. ரவிச்சந்திரன், 349 ஏகாம்பரம் வீதி, திருகோணமலை

ஆறுதல் பரிசுகள் ~ திரு. P. ராஜூ , இறையிரக்கதிருத்தலம், திருகோணமலை
S.A,கொலின் .70/29, சுப்ரமணியம் வீதி, கருவப்பங்கேணி, மட்டக்களப்பு
J.F.றொபின் கெனடி .15/12, சினேக் லேன், திருகோணமலை
செல்வி. சசிகுமார் டிவைனா, குவாடலூப்பே அன்னைதிருத்தலம், திருமலை
செல்வி. டிலுஸா , மூதூர்.

மேற்படி பரிசுக்குரியவர்கள் தமது டிக்கட்டுடன் திரு. LG லீனஸ் ( 0776333952 ) அல்லது திரு P.ராஜூ ( 0752168336 ) ஆகியோருடன் தொடர்பு கொண்டு தமது பரிசுகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்**
ச.அன்ரனிதாஸ்
கிறிஸ்தவ வாழ்வுசமூகம்
திருகோணமலை மறைமாவட்டம்.

இதற்குரிய புகைபடங்கள் 8ம் பக்கத்தில்...

# வாரம் ஒருவரம் கேட்போம்

**நன்றியுணர்வு**

- ☐ இன்றைய உன் நிலைக்குக் கடவுளிடம் நன்றியோடு இரு.
- ☐ இயற்கையைத் தந்த கடவுளைப் போற்று. அக்கொடையை அழித்துவிடாதே.
- ☐ உன் பெற்றோருக்கு அவ்வப்போது அன்பளிப்புகள் தந்து உன் நன்றியுணர்வைக் காட்டு.
- ☐ ஆசிரியர்களிடமும், பெரியவர்களிடமும் நன்றியோடு வாழ குழந்தைகளுக்குக் கற்றுக்கொடு.
- ☐ சிறிய உதவிக்கும் மகிழ்வோடு நன்றி சொல்.
- ☐ வேலையைப் பொறுப்போடு செய்து உன் அதிகாரிக்கு நன்றியுள்ளவனாய் இரு.
- ☐ பெற்ற உதவியைப் பாராட்டி,நன்றியைச் சொல்லிலும் செயலிலும் காட்டு.

**தன்னலமின்மை**

- ☐ பிறரை நினைத்து அவர் தேவைகளை எண்ணுவதில் மகிழ்ச்சிகொள்.
- ☐ உன்னிடம் இருப்பதைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவழிகளைத் தேடு.
- ☐ ஏழையின் தேவையை அறிந்துகுறித்த நேரத்தில் உதவும் கரம் கொடு.
- ☐ தன்னலமற்ற எண்ணத்தோடு தேவையானபொருட்களைச் சேகரி.
- ☐ தன்னலமற்றசேவைசெய்துநல்லதைஅறிவி.
- ☐ வசதியைத் தேடும்போதுமுதியோரையும் ஊனமுற்றோரையும் நினைத்துக் கொள்.
- ☐ தன்னலமற்றுவாழும் பிறரைப் பாராட்டிஉற்சாகப்படுத்து.

**ஈகை**

- ☐ ஏழைகளின் தேவைகள் நிறைவேற உடனடி தீர்மானம் செய். அவர்களைச் சந்தித்துப் பேசு.
- ☐ காயப்பட்ட மனிதனை மருத்துவமனையில் சேர்க்க சந்தர்ப்பம் கிடைப்பின் நழுவவிடாதே.
- ☐ இறந்தவர்களின் வீடுகளைச் சந்தித்து ஆறுதல் சொல்.
- ☐ வரிசையில் முந்திச் செல்லாதே.
- ☐ உன் மனைவிக்குவீட்டுவேலையில் உதவிசெய்.
- ☐ உன் குழந்தை தவறு செய்யும் போது புன்சிரிப்போடு திருத்து.
- ☐ படிப்பறிவில்லாத ஒரு பாமரனுக்குப் படிப்பறிவுகொடு.

**வீண்பேச்சு**

- ☐ உண்மையான காரணத்திற்காகவும் நற்செயல்களுக்காகவும் மட்டும் பேசு.
- ☐ பிறருடைய செயல்களில் காரணமில்லாமல் நுழையாதே.
- ☐ வீண் பேச்சு பேசும் நண்பர்களிடமிருந்து விலகு.
- ☐ நற்காரியங்களைப் பற்றிபேசத் தொடங்கி பிறருடையவீண் பேச்சை நிறுத்திவிடு.
- ☐ வீண்பேச்சைப் பெரிதுபடுத்தாதே.
- ☐ உண்மையைக் குழந்தைகளிடம் கூறு.
- ☐ சரியானதைப் பேசிவீண் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வை.

**அருட்பணி. ஆஞ்சலோ பொன்னையா, ஜே.ச.** **நன்றி: பீட்டர் தும்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவழிபாடு
## திருப்பலி வாசகப் பணியாளர்களுக்கான சில படிமுறைகளும் அறிவூட்டல்களும்.

### முன்னுரை

1. எமது சுவாசத்திற்கும் பேச்சுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. தொ.நூ. 2:7 இல், "அப்பொழுது ஆண்டவராகிய கடவுள், நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்." சுவாசம் என்பது உயிர். வாசகரின் சுவாசமும் கூடியிருக்கும் சமூகத்தின் சுவாசங்களும் ஒருமனப்பட வேண்டும். (கிறிஸ்துவின் சரீரம்) சுவாசிக்கும் வார்த்தை - அன்பு. ("The Love breathing Word" St Thomas Aquinas) இவ்வார்த்தையைப் பெறுபவர் எப்பொழுதும் அன்பை சு வா சி த் து வார்த்தையை கேட்பவர்களாகவும், பெறுபவர்களாகவும் மட்டுமின்றி அதை வாழ்ந்து, அன்பைப் பெறுவதுமன்றி அன்பார்ந்தவர்களாக மாறுவதுமே இலட்சியம். வாசகம் வாசிக்கப்படும் போது, இறைவன் தன் வார்த்தை வழியாக யாவரையும் தொடுகின்றார், அரவணைக்கின்றார், உயிர் வழங்குகின்றார்.

2. இறைவார்த்தை தூய ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்டது. அதே தூயஆவி அன்றும் இன்றும் எம்மோடு உறவாடுகின்றார். சுவாசம் எமக்கு உயிர் அளிப்பது போல தூய ஆவியின் செயற்பாடு இறை வார்த்தைக்கு புத்துயிர் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆண்டவரின் உள்நகர்வு எங்களை அவரது அனுபவத்திற்கு அழைத்துச் சென்று அவர் பிரசன்னத்தில் வாழச் செய்கின்றது. ஒரு இறை அனுபவம்.

3. வாசகப்பணி புரிவது ஒரு இறை அழைத்தலாகும். இவ் அழைப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

4.வாசகப்பணி புரிவோர் உறுதிப்பூசுதல் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

5. வாசகப்பணி புரிபவர்களுக்கு விசுவாசம், நல்லொழுக்கம், மரியாதையான உடை, (ஆண்கள் T Shirt அணிவது முறையல்ல). குரல்வளம் இன்றியமையாத தாகும். குரல் இனிமையானதாகவும், தெளிவானதாகவும், கேட்போருக்கு இலகுவில் விளங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். பெண்கள் ஒழுக்கமான உடை அணிய வேண்டும். பெண்கள் தலை மறைப்பு (Veil) அணிந்திருப்பது வரவேற்கத்தக்கது. (தேவைப்படின் வாசகர்ளுக்கான ஒரு மேலாடையைத் தயாரிக்கலாம்)

### முன்னோடி ஆயத்தம்

6. இறைவார்த்தையை வாசிப்பவர், இறைவார்த்தையை சந்திக்க வேண்டும்.

7. ஞாயிறு திருப்பலிக்கு வாசகம் வாசிப்பவர்,திருப்பலிக்கு முன் திருப்பண்ட அறைக்குச் சென்று (Sacristy) மேலோட்டமாக வாசகத்தைப் பார்த்து வா சி ப் ப து முறையல்ல. ஒரு வாசகருக்கு ஆன்மீக மற்றும் நுணுக்கமான ஆயத்தம் அவசியம்.

8. ஞாயிறு வாசகத்திற்காக புதன் கிழமை முதல் வாசகர் தினமும் 10 நிமிடங்களுக்கு குறிப்பிட்ட பகுதியை மெதுவாக, வாசித்து, தியானித்து, ெ ச பி த் து அவ் வார்த்தைகளில் மூழ்க வேண்டும். வார்த்தை மனுவுரு எடுத்தது போல, எம்மிலும் அதே வார்த்தை மனுவுரு எடுக்கிறது.

9.வாசகர் குறிப்பிட்ட விவிலியப் பகுதியை வீட்டில் ஒருசில தடவைகள் சத்தமாக வாசித்துப் பார்ப்பது நலம்.

10. வாசகத்தாள்களைக் கொண்டு இறைவார்த்தையை வாசிப்பது தவறானது. இறைவார்த்தையானது வாசகப் புத்தகத்திலிருந்தே வாசிக்கப்பட வேண்டும். விசுவாச மன்றாட்டையும் முன் கூட்டியே ஒரு நல்ல கொப்பியில் எழுதி வைத்து, வேறொரு மேடையில் வைத்து அதிலிருந்து வாசிக்க வேண்டும். அப்புத்தகத்தை வாசக மேடைக்கு கொண்டு செல்வது முறையல்ல.

### தற்போதைய ஆயத்தம்

11. வாசகர், திருப்பலி ஆரம்பிப்பதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பாக வந்து வாசகத்தைப் பார்க்க வேண்டும். குறிப்பிட்ட வாசகம் இருக்கும் அடையாளமிடப் பட்டுள்ளதா, நாடா அல்லது அடையாளம் சரியான பக்கத்தில் உள்ளதா என்றும் கவனிக்க வேண்டும்.

12. வாசக மேடையில் வாசகப் புத்தகம் சரியான பக்கத்தில் திறந்த நிலையில் இருக்க வேண்டும்.

13. திருப்பலிக்கு முன் ஒலிவாங்கி (மைக்) அனைத்தும் பொருத்தப்பட்டு, சரிபார்க்கப் பட்டிருக்க வேண்டும். வாசகர் வாசக மேடையில் நிற்கும்போது அதனை ஊதவோ, தட்டவோ அவசியமில்லை.

14. வாசகர் பீடத்திற்கு சென்ற பின்னர், குரலைச் சரிபார்ப்பது, மூக்குக் கண்ணாடியைத் துடைப்பது, உயர்ந்த மிதியடி (பாதணி) அணிந்து நிற்பது, தலை முடியை பரப்பியவாறு நிற்பது போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.

15. வாசிக்கும்போது வாசிப்பவர் ஒலிவாங்கி (மைக்கை) தமது உயரத்திற்கேற்றவாறு சரிசெய்து அதற்கு நேராக நின்று வாசிக்க வேண்டும். ஒலிவாங்கி அதிக தூரமாகவோ, அல்லது மிக நெருக்கமாகவோ இருக்கக்கூடாது. வாசிக்கும் போது வாசிக்கப்படும் சொற்களின் எதிரொலியை அவதானிக்க வேண்டும்.

16. வாசிப்பவர் திருப்பலிக்கான வாசகங்களை வாசிக்கும்போது, இரு கரங்களையும் வாசகப் புத்தகத்தின் மேல் வைத்தபடி, நிதானமாகவும், தாழ்மையுடனும் இறைவார்த்தையை வாசிக்க வேண்டும்.

17.திருப்பலியில் குருவானவரின் ஆரம்ப செபம் முடிவடைந்ததும் (அது வாசகத்திற்கு முன்பு) மூன்று வாசகர்கள் (முதலாம் பதிலுரைப்பாடல் இரண்டாம் வாசகர்கள்) எழுந்து பக்தியாகச் சென்று பீடத்தை நோக்கி தலை வணங்கி, வாசக மேடையை நோக்கிச் செல்ல வேண்டும். ஏனைய இருவா் வாசக மேடைக்கு அருகில் உட்காரவும்

### எடுத்துரைப்பு

18. வாசகர் வாசகமேடையை அடைந்த பின்பு, மக்களைப் பார்த்து உதாரணமாக: திருத்தூதரான புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம், அதிகாரம்... திருவசனங்கள்... எனக்கூறிவிட்டு சற்று மௌனம் காக்கவும் (1-4 வரை மௌனமாக எண்ணவும்) திரு மௌனம், இறைவன் ஒரே நேரத்தில் அமைதியும் வார்த்தையுமானவர். இறைவனை அமைதியில் தொடர்பு கொள்வது சிறந்தது. அமைதி என்பது சக்தி மிக்கது. பின்பு செப உணர்வோடு இறை வார்த்தையை வாசிக்கத் தொடங்க வேண்டும்.

19. இறைவார்த்தையை வாசிக்கும்போது, வேகம், சொற்களில் ஏற்றம், இறக்கம், முற்றுப்புள்ளி, கருத்து ஆகியவற்றை நன்கு அவதானிக்க வேண்டும்.

20. இறைவார்த்தையை மெதுவாகவும், தியான நிலையிலும், அன்பாகவும் வாசிக்க வேண்டும். செவிமடுப்பு வழியாகத்தான் விசுவாசம் பிறக்கின்றது. (உரோம.10:17)

21. இறைவார்த்தை வாசிப்பது ஒரு செபம் ஆகும். மாறாக திறமையை வெளிப்படுத்தும் ஒரு களம் அல்ல. இறைவார்த்தை மனதுக்கு ஒளியும், திடத்திற்கு தீயுமாகும். "நீங்கள் யாரிடம் பேசுகிறீர்களோ, அவரின் உந்துதலினால் விசுவாசம் ஏற்படும். விசுவாசத்தினால் எதிர்பார்ப்பு உண்டாகும். எதிர்பார்ப்பினால் அன்பு உண்டாகும்." புனித அகுஸ்தினார்.

22. இறைவார்த்தை வாசிக்கப்படும்போது, வாசகர் தன்னுடைய வார்த்தையை அல்ல, மாறாக இறைவனுடைய வார்த்தையை தன்னுடைய சொந்தக் குரலால் மற்றவர்களுக்கு எடுத்துரைக்கிறார் என்பதை உணர வேண்டும்.

23. வாசகர் வாசிக்கும்போது இடையிடையே மக்களை அன்பாக பார்பது நலமாகும்.

24.இறைவனுடைய வார்த்தையானது வாசிப்பவரின் உதடுகள் வழியாக ஆலயத்தினுள் முழங்கப்பட்டு விசுவாசிகளின் காதுகளுக்கு எட்டி இதயங்களைத் தொடவேண்டும். இவையாவும் நுணுக்கமான ஆன்மீக ஆயத்தத்தின் வழியாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

25. நல்லதொரு கருத்துள்ள திருவிவிலிய வாசகமானது, அன்றைய நாளுக்கான இறையனுபவத்தை பெற்றிட உதவியாயிருக்கும்.

26.வாசகமுடிவில் சற்று நேரம் அமைதிகாத்து, (1-4 வரை மௌனமாக எண்ணவும்) அதன் பின்னர் வாசகர் மக்களைப் பார்த்து, "இது ஆண்டவரின் அருள் வாக்கு" எனக் கூற வேண்டும்.

27. மூன்று வாசகர்களும் இறைவார்த்தையை வாசித்த பின்பு பீடத்தை நோக்கி தலைவணங்கி விட்டு பக்தியோடு செல்ல வேண்டும். (அல்லேலூயா வசனத்திற்கு பின்பு)

### ஏனைய விடயங்கள்.

28. பதிலுரைப்பாடல் வாசிப்பவர், பதிலுரைப்பாடல் என்று கூறாமல், "உங்கள் பதில்" எனக்கூறி அப்பதிலை இருமுறை தெளிவாக வாசிக்கவும். பதிலுரையை ஒரு பலகையில் எழுதி அனைவரும் பார்க்கக்கூடியவாறு வைப்பது நலம்.

29. நற்செய்திக்கு முன் சொல்லப்படும் நற்செய்தி ஆர்ப்பரிப்பை வாசகர் வாசிக்-கலாம். அல்லது தெளிவாகப் பாடலாம். அவ்வாறு வாசிப்பவர் பாடிய பின்பு வாசக மேடையை விட்டு அகல வேண்டும். வாசக மேடைக்கு குருவானவர் வரவேண்டும்.

30. வாசகத்திற்கான கருப்பொருள், முதல்வாசகம், பதிலுரைப்பாடல், இரண்டாம் வாசகம், நற்செய்தி ஆர்ப்பரிப்பு, எழுந்திருங்கள், அமருங்கள் ஆகியவற்றை கூற வேண்டியதில்லை. இறைமக்கள் ஏற்கனவே இதனை அறிந்திருக்கின்றனர். மீண்டும் மீண்டும் நினைவுறுத்துவது அவசியமற்றது.

31. திருப்பலியில் வாசிக்கப்படும் இறைவார்த்தைக்கு விமர்சனம் அவசியமாகும். நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால், அடுத்தவர் நம் குறைகளைத் திருத்தும்போது, அதனை நல்ல மனதோடு ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

32. இறைவார்த்தையை எடுத்துரைக்கும் அதே குரலால், மற்றவர்களைப் பழித்துரைக்கவோ, அவதூறான வார்த்தைகளைப் பேசவோ இடமளிக்கக் கூடாது. "கெட்ட வார்த்தை எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. கேட்போர் பயன-டையும்படி தேவைக்கேற்றவாறு அருள் வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகளையே பேசுங்கள்." (எபே.4;29) 'கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி உங்களுள் நிறைவாகக் குடிகொள்வதாக' (கொலோ.3;16)

33. இறைவார்த்தையை எடுத்துரைப்பவர் ஒரு பேச்சாளரோ நடிகரோ அல்ல. மாறாக அவர் வார்த்தையின் ஆழ்ந்த ஈடுபாட்டிற்கும் திறமைக்கும் இடைப்பட்டவர்.

34. இறைமக்களின் கவனத்தைக் கவரக்கூடிய வகையில் இறைவார்த்தையை எடுத்துரைப்பது; வாசகர், தியாக்கோன், குருவின் பணியாகும். இறைமக்கள் அவ்வார்த்தைக்கு செவி கொடுக்க வேண்டும். இறைவார்த்தையை விவிலியத்தையோ வாசகத் தாளையோ கொண்டு வாசிப்பது செவிமடுத்தல் அல்ல.

35. விசுவாசிகளின் மன்றாட்டை வாசிப்பவர், விசுவாசப்பிரமாணம் முடிவடையும் போது தனது இருப்பிடத்தைவிட்டு எழுந்து, பீடத்தை நோக்கி வந்து, தலை வணங்கி வாசக மேடைக்குப் புறம்பான வேறொரு மேடையை அடைந்து (அதாவது, பீடத்திற்கு இடப்புறமாக இருக்கும் மேடையை அடைந்து) விசுவாசிகள் மன்றாட்டிற்குமுன் குருவானவரின் ஆரம்ப செபம் கூறி முடிந்ததும் மன்றாட்டை ஆரம்பிக்கவும். மன்றாட்டுக்கள் முடிந்த பின்பு, குருவானவரின் விசுவாசிகளின் மன்றாட்டுக்களின் இறுதிச் செபத்திற்கு பின்பு பீடத்தை விட்டுச் செல்லவும். விசுவாச மன்றாட்டை வாசிக்க வேண்டும். பதிலை மாத்திரம் பாடலாம். (அறிவித்தல்களும் இடது புற வாசக மேடையில் வாசிக்கப்பட வேண்டும்)

36. திருப்பலி முன்னுரை, விசுவாசிகள் மன்றாட்டு, அறிவித்தல்கள் போன்றவை பீடத்திற்கு இடப்பக்கத்திலிருக்கும் வேறொரு மேடையிலிருந்து வாசிக்கப்பட வேண்டும்.

37. உலகப்புகழ்பெற்ற வயலின் வித்துவான் "அன்டனி ஸ்ட்ராடிவாரி" என்பவர், "முழுமைக்காக ஏன் இத்தனை பாடுகள்?" என்ற வினாவிற்கு இவ்வாறு பதிலளித்தார், "இறைவனுடைய உன்னதமான இசையை உலகிற்கு எடுத்துச்செல்ல அவருக்கு வயலின் தேவைப்படுகிறது. எனவே, என்னுடைய வயலின் குறைபாடான-தாக இருந்தால் இறைவனுடைய இசை எவ்வாறானதாக அமையும்?"

38. வாசகர் வழியாக இறைவனுடைய வார்த்தை இறைமக்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. அவருடைய வார்த்தையை தகுதியான முறையில் எடுத்துரைத்தால், இளமை முதல் முதுமை வரை, கஷ்டமான, நம்பிக்கையற்ற, சோகமான, மகிழ்ச்சியான, திருப்தியான, சௌகரியமான எவ்வேளைகளிலும் ஆண்டவர் அவர்களுடைய வாழ்வில் குடிகொள்வார்.

39. திருப்பலியில் கலந்து கொள்ளும் பக்தர்கள், வாசகருடன் இணைந்து விவிலியமோ, நாட்காட்டியோ, வாசகத் தாளைக் கொண்டோ இறைவார்த்தையை வாசிப்பது என்பது செவிமடுத்தல் அல்ல.

40. ஒரு வாசகர் ஒரு ஞாயிற்றுக்கிழமை வாசிக்காவிட்டாலும், அவர் தொடர்ந்து ஞாயிறு வாசகத்தை ஆயத்தப்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஒரு வாசகர் குழாம் அமைத்து இரு மாதங்களுக்கு ஒரு அட்டவணையை ஆயத்தப்படுத்தி வைத்தல் சிறந்தது.

41. "இந்த இறைவாக்குகளைப் படிப்போரும் இவற்றைக் கேட்போரும் இந்நூலில் எழுதியுள்ளவற்றை கடைப்பிடிப்போரும் பேறு பெற்றோர்" (திருவெளிப்பாடு 1;3).

தயாரிப்பு, மேற்பார்வை,
அருட்பணி. இக்னேஷியஸ் லொயோலா வருணகுலசிங்கம்.
தேசிய வழிபாட்டு இயக்குனர் ( 2010 - 2016)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர் நிலை காணவே

அருட்பணி N.C அருள்வரதன்

மன்னித்து வாழ வேண்டும்
மன நிறைவை வாழ வேண்டும்
குற்றம் செய்தோரை
கொண்றொழிக்க வேண்டுமென்ற
சின்ன எண்ணங்கள்
சிதறியவை போக வேண்டும்

தவறுகள் செய்வது
மனித இயல்பே ஆனால்
மன்னித்து நிற்பது
தெய்வீக நிலையாகுமே

கோபம் பழி உணர்வு இவை
வாழ்வுக்கு வேண்டாதவையே
இவைகளால் உறவுகள்
முறிந்துவிட்டாலவை
மனிதங்கள் மறைந்துவிட
வழிகாட்டும் வழிகளாகுமே

தவறுகள் செய்வோரின்
தவறினைக் காட்ட வேண்டும்
தவறினை உணர்ந்து அவர்
தான் மாறும் போது அதன்
உண்மை நிலை கண்ட
உயர் மனிதர் ஆகின்றார்

மன்னிப்போம் மறப்போமென்னும்
மாண்புடையவார்த்தைகளை
எள்ளளவும் மீறாமல்
ஏற்றபடி வாழும் போது
மனிதங்களின்னும்
மறையவில்லை என்பதற்கு
நற்சான்று காட்டிவிட்ட
வாழ்வுகளே வளங்கள் கூறும்.

## அழைப்பின் குரல் கேட்டேன்

**திருமலை மறைமாவட்டம் தூய யோசேப் வாஸ் சிறிய குருமடத்திலிருந்து பெரிய குருமடத்திற்கு காலடி பதிக்கும் சகோதரனுக்கு ..**

**தூய திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் வழிபாட்டுக் குழுவினர் வழங்கும் வாழ்த்துப் பா**

கரம் பிடித்து வழிநடத்த உனை
கர்த்தர் இயேசு அழைத்தாரோ
காலம் எல்லாம் அவர் பணியாற்ற ~ நீ
கருத்தாய் அவர் குரல் கேட்டாயோ

உலகின் மாயை உனை வீழ்த்தவில்லை
உறவுகள் செல்வம் உனை ஆழவில்லை
உயிர்ப்பின் வழியே உனை மாற்ற
உளமதில் ஆர்வம் கொண்டாயோ

கலையத்தில் ஆர்வம் கொண்டு ~ நீ
கரங்களில் இசை மீட்டிடவே
கடவுளை வாழ்த்திப் பாடிடும் ~ நல்ல
கருவூலத்தை நீ தெரிந்து கொண்டாய்

கர்வம் பெருமை உனை அணுகாமல்
காத்திட இறைவனை வேண்டுகிறோம்
பணிவும் அன்பும் தியாகமுமே
பணி வாழ்வின் உன்னத கேடயமாம்

ஞானத்தில் சிறந்திட வாழ்த்துகிறோம்
நல்ல குருவாய் மலர்ந்திட ஆசிக்கிறோம்
நல்ல பணியாளனாய் நீ வரவே
நாளும் நாம் இறைவனை வேண்டுகிறோம்

ஆக்கம்
ஸ்ரெலா ஜெரோம்

## நாங்கள் வழங்கும் கனி

**1ம்பக்கத் தொடர்ச்சி ..........**

தற்பொழுது அடுத்த கனியாக சகாயநாதன் டெல்சன் என்பவர் எமது மண்ணில் இருந்து களுத்துறை பெரிய குருமடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார். இவர் தூய யோசேப்வாஸ் சிறிய குருமடம் ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு சிறிய குருமடத்தில் இணைந்தார். இவர் தனது A/L பரீட்சையில் A 2C என்னும் சித்திகளையும் பெற்று தனது அறிவை வெளிக்காட்டினார். இவர் தனது ஆங்கில அறிவை விருத்தி செய்யும் பொருட்டு இயேசுசபை குருமடத்திற்கு ஆங்கில வகுப்பிற்கு அனுப்பப்பட்டார். இவர் தனது N.S.E பரீட்சையை எழுதி அதில் சித்தியடைந்தார். இவர் கல்வி அறிவில் மட்டும் இன்றி இசை, கலை போன்றவற்றிலும் சிறந்து விளங்கினார்.

இவர் 05.10.2016 அன்று தனது குருத்துவ மேற்படிப்புக்களை மேற்கொள்ள களுத்துறை பெரிய குருமடத்திற்கு அனுப்பப்பட்டார். ஆகவே நாங்கள் கொடுத்த இந்த கனி தனது குருத்துவம் வரைக்கும் இறைவனை விட்டு பிரியாது அவரின் அன்பில் நிலைத்து இறைபணியை சிறப்புறச் செய்ய வேண்டி அவருக்காக பிரார்த்தித்து நிற்கின்றோம். அத்துடன் இவரின் உருவாக்களில் உதவி புரிந்த அருட்பணி செ.சுகுனேந்திரன் குருஸ் அருட்பணி சூ. டக்ளஸ் ஜேம்ஸ், தற்போதைய அதிபர் அருட்பணி எஸ்.எஸ். ஜோன்பிள்ளை போன்றவர்களையும் நன்றியுடன் நினைவு கொள்கின்றோம்.

**தூய யோசேப்வாஸ் சிறிய குருமடம்**
**மாணவர்கள்**

## அன்பு



ஆலமர வேரைப் போல
அசைக்க முடியாதது அன்பு
காசில்லாத வறிய ஏழையிடம்
காணப்படும் பெரிய செல்வம் அன்பு
பகைவன் எனும் கொடியவனை
பாதை மாற்றும் அன்பு
அன்பு என்னும் ஆயுதத்தை
அனைத்து உயிரும் எடுத்தால்
அகிலம் அதை நாம் அனைவரும்
அடக்கி ஆள முடியுமே

ஜெரோம்
**தூய யோசேப் வாஸ் சிறிய குருமடம்**
**திருகோணமலை**

## இது இரக்கத்தின் காலம்
## வாழவைக்கும் வழி அறிந்த வறியோர்



பங்குக் கோவிலின் திருநாள் நெருங்கி வந்தது. அந்த ஆண்டு, பங்குப் பேரவை உறுப்பினர்கள் இணைந்து, ஒரு தீர்மானம் எடுத்திருந்தனர். தங்கள் பங்கில் மிகவும் வறுமைப்பட்ட பத்துக் குடும்பங்கள் திருநாளைக் கொண்டாட உதவியாக அவர்களுக்குத் தேவையானதைக் கொடுக்க வேண்டும் என்பதே அத் தீர்மானம்.

புத்தாடைகள், உணவுப் பொருட்கள், பரிசுகள் என்று பலவும் நிரப்பப்பட்ட பத்து அட்டைப் பெட்டிகளை பங்குப் பேரவை தயாரித்திருந்தது திருநாளுக்கு முந்திய நாளன்று பத்துக் குடும்பங்களையும் அழைத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஓர் அட்டைப் பெட்டியை வழங்கிக் கொண்டிருந்தனர் பங்குப் பேரவையினர். அவ்வேளையில் அங்கு மற்றுமொரு குடும்பம் வந்து சேர்ந்தது தாய் தந்தை ஒரு மகள் என்று மூவர் வந்து சேர்ந்தனர். போரால் துன்புற்ற வேற்று நாட்டிலிருந்து தப்பி ஓடி வந்தவர்கள் இம் மூவரும்.

அவர்களின் வருகையால் அங்கு சங்கடமான சூழல் உருவானது பங்குப் பேரவை உறுப்பினர்கள் சரியாக பத்து அட்டைப் பெட்டிகள் மட்டுமே தயார் செய்திருந்தனர் பதினொராவது குடும்பத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை அவ்வேளையில் தனக்குரிய அட்டைப் பெட்டியை பெற்றுக் கொண்ட ஒரு குடும்பத்தின் தாய் அறைக்கு நடுவே சென்றார். தன் பெட்டியிலிருந்த ஒரு துண்டை தரையில் விரித்தார் தன் பெட்டியில் இருந்த ஒரு சிலப்பொருள்களை எடுத்து அத்துண்டின் மீது வைத்தார் விரைவில் ஏனைய ஒன்பது குடும்பங்களைச் சார்ந்தவர்களும் தங்கள் பெட்டிகளிலிருந்து உணவு, உடை என்று வெவ்வேறு பொருட்களை துண்டின் மேல் வைத்தனர். விரைவில் அங்கு 11வது பெட்டிக்குரிய பொருட்கள் சேர்ந்தன அப்பொருட்களை துண்டில் மூட்டையாகக்கட்டி 11வது குடும்பத்திடம் ஒப்படைத்தனர்.

**“வறியோர் பேறுபெற்றோர், ஏனெனில் வாழவைக்கும் வழிகள் அவரகளுக்குத் தெரியும்.”**
ஆதாரம் வத்திக்கான்.

## நிலாவெளி றோமன் கத்தோலிக்க பாடசாலை
## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை
## 2016

| | |
|---|---|
| அதிபர் | : திரு. G. முரளிதரன் |
| உப அதிபர் | : திருமதி. C.S. சனில்குமார் |
| பகுதித் தலைவர் | : செல்வி. V. இசபெல்லா |
| கற்பித்த ஆசிரியர்கள் | :5A திருமதி. Y. நவரெட்ணம் |
| | 5B திருமதி. C. பிரபாகரன் |

| மாணவர் விபரம் | புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|
| 1. தேவராஜன் சமில்டன் | 173 | 25 |
| 2. லொயிட் எமில்ராஜ் அஸ்வின் | 169 | 68 |
| 3. யூஜின் மொராயஸ் பிரீத்தி | 163 | 131 |
| 4. பத்மநாதன் மிதுசன் | 162 | 149 |
| 5. சந்திரகுமார் சங்கவி | 159 | 197 |
| 6. சசிகுமார் டிலக்சி | 160 | 188 |
| 7. மோகனதாஸ் விதுஷா | 155 | 272 |
| 8. மதிசீலன் சதுவின் | 153 | 314 |
| 9. சுகுனதாஸ் சகானா | 152 | 345 |

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் 48 பேர்
151 புள்ளிக்கு மேல் 09 ேர்
100 ~ 151 வரை 22 பேர்
7 ~ 99 வரை 14 பேர்

இதற்குரிய புகைபடம் 8ம் பக்கம்....

வாசகர்களே!
உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப் பார்க்கின்றோம். அவற்றை திருமலைத் தீபத்திற்கு அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :-
ஆசிரியர்
திருமலைத் தீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிக்கதை ஒன்று

*Fr. NC*

ஒரு சிறுவன். பல திறமைகள் அவனிடமிருந்தன. காரணம் அவனுடைய தந்தை படித்த ஒருவர். அவர் யாருடனும் கதைக்கும் போது இந்தச்சிறுவன் அவர் அருகே இருந்துகொண்டு அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருப்பான்.

சில வேளைகளில் அந்தச் சிறுவன் பெரியவர்களோடு கதைக்கும் போதுகூட பலரும் வியக்குமளவிற்கு மிகவும் தெளிவாகப் பேசுவான்.

பாடசாலையில் கூட அவனது பேச்சாற்றலை ஆசிரியர்கள் பாராட்டுவார்கள்.

பாடசாலையில் நடந்த தமிழ்த்தின பேச்சுப் போட்டியில் இந்தச்சிறுவன் முதலிடம் பெற்றது பலரும் எதிர்பார்த்ததுதான்.

சொல்வார்கள் 'கடுகு சிறிதானாலும் காரம் பெரிதென்று' இந்தச் சிறுவனோடு ஒப்பிடும் போது அது எத்தனை உண்மை என்று தெரிகிறது.

# இரக்கம் என்பது கடவுளின் திருப்பெயர்

## யூபிலி ஆண்டின் சிறப்பு விவிலியத் தொடர்

**தொடங்குமுன்**

இரக்கத்தின் ஆண்டு இறை இரக்கத்தின் ஆழத்தையும் மனித இரக்கம் பயணிக்க வேண்டிய தூரத்தையும் ஆய்வு செய்ய ஏற்ற காலமாகிறது. தொழிநுட்பம், பொருளாதார வளர்ச்சி, கல்வி மேம்பாடு என எல்லா துறைகளிலும் 'நான்' மட்டுமே மையமாக சுழலுகிற இக்காலத்தில் அவன்/அவள்/அதுவை மையமாகக் கொண்டு வாழ பயிற்சி வழங்கும் காலமாகவும் இவ்விரக்கத்தின் ஆண்டு திகழ்கிறது. இத்தகைய முயற்சிகளுக்கான அடித்தளம், உந்துதல் ஏதாவது விவிலியத்தில் இருக்கிறதா என தேடிப் பார்க்கும் முயற்சியே இக்கட்டுரை.

### இறைஞ்சும் மனமும் இரங்கும் உள்ளமும் (தொநூ 18:16 – 33)

ஆபிரகாம் சோதோம் கொமோராவுக்காக இறைவனிடம் பரிந்து பேசுகின்றார். இரக்கப்படும் இரு இதயங்களைப் படம் பிடிக்கும் உன்னத பகுதி இது. சோதோம் கொமோரா நகர மக்களின் 'பாவம் மிகவும் கொடியது' என ஆண்டவர் உரைக்கின்றார். ஆபிரகாம் ஐந்து முறை தொடர்ந்து மனம் தளராமல் இறைவனிடம் மக்களுக்காகப் பரிந்து பேசுகின்றாரர் 'என் தலைவரே, சினமடைய வேண்டாம். இன்னும் ஒரே ஒரு தடவை மட்டும் எனனைப் பேசவிடும். ஒருவேளை அங்கு பத்துபேர் மட்டும் (நல்லவர்களாக) காணப்பட்டால்' அந்த நகரை அழித்துவிடுவீரோ? 'தீயவர்களோடு நல்லவர்களும் அழிந்து விடுவார்களே' ன அங்கலாய்க்கின்றார். அந்த பத்து நல்லவர்களை முன்னிட்டு 'அந்த நகரை நான் அழிக்க மாட்டேன்' என இறைவன் வாக்களிக்கின்றார் (தொநு 18:32). இரக்கமுள்ள இறைவன், இறங்கி வந்து ஆபிரகாமின் குரலுக்கு செவிமடுக்கின்றார். நீதியின்படி நகர மக்கள் தண்டணைக்கு உரியவர் என்றாலும் தமது இரக்கத்தால் நல்லவர்களைக் 'காப்பேன்' என உரைக்கின்றார்.

ஆபிரகாம், இறைநம்பிக்கையின் தந்தை, தண்டிக்க நினைக்கும் இறைதந்தை முன் கரம்விரித்து மன்றாடுகின்றார். மோசே போல, தாவீது போல, ஏன் இறை வாக்கினர்களைப் போல, அனைவருக்கும் முன்னோடியாக இறைவனின் இரக்கத்தை மன்றாடி கேட்கின்றார் தமது தொடர்ந்த மன்றாட்டின் வழியாக 'அழித்தொழிப்பவர் அல்ல கடவுள்' மாறாக, காக்கும் கருணை கொண்டவர் என்பதை நமக்கு உணர்த்துகின்றார். ஒவ்வொரு முறை ஆபிரகாம் இறைஇரக்கத்திற்காக இறைவனிடம் கேட்கும் போதும், 50,40,30, என்று இறங்கும், இறங்கி வரும் இறைவனாக இருப்பதை நாம் கண்டு கொள்கின்றோம்.

தொடக்க நூல் 18:16-33, இறைவன் தீர்ப்பின், நீதியின் இறைவன். எனினும் அவரது இரக்கம் அதைவிடப் பெரியது என உணர்த்துகின்றது ஐம்பதில் இருந்து பத்துக்கு இறைவன் இறங்கி வருகின்றார். பத்தே பத்து நல்லவர்கள் இருந்தால் போதும் நகரினை அழிக்க மாட்டேன் என உறுதி கூறுகின்றார். பத்துப் பேர் கூட இல்லாத இழி நிலையில் நகரம் தண்டணைக்கு உள்ளாகின்றது. எனினும் கடவுளின் தண்டனைத் தீர்ப்பில் அழியாதபடி லோத்தையும், அவரது குடும்பத்தாரையும் கடவுள் காப்பற்ற விழைகின்றார். இருமனமும் உடனே இசைந்திடும் உள்ளமும் இல்லாத லோத்தின் குடும்பத்தாரைக் காப்பாற்ற இறைவன் எடுக்கும் முயற்சிகள் இதயத்தை தொடுவன. லோத்தின் மருமக்களுக்கு நகரின் அழிவு பற்றியச் செய்தி நகைப்புக்கு உரியதாகத் தோன்றியது (தொநூ19:14) கடவுளின் கட்டளையை ஏற்று உடனே நகரை விட்டு ஓடாமல் காலம் தாழ்த்துகின்றனர் (தொநூ19:16) ஆனால் ஆண்டவரின் தூதர்களோ, இறைவனின் இரக்கத்தை முன்னிட்டு லோத்தின் "கரத்தையும், அவர் மனைவியின் கையையும், அவர் இரு புதல்வியர் கையையும் பிடித்துக்கொண்டு போய் நகருக்கு வெளியே விடுகின்றனர் (தொநூ9:76) இந்த கருணைச் செயலால் லோத்து உருகி போகின்றார். "உங்கள் அடியானுக்கு உங்கள் பார்வையில் இரக்கம் கிடைத்துள்ளது. என் உயிரைக் காக்கும் பொருட்டு நீர் காட்டிய பேரன்பு உயர்ந்தது" (தொநூ19:18-19) என நன்றி கூறுகின்றார். அத்தோடு இன்னும் ஒரு தயவுக்காக வேண்டுகின்றார். "மலைக்குத் தப்பியோடி உயிர் பிழைக்க என்னால் இயலாது. அருகிலுள்ள நகருக்கு தப்பியோடுவேன். எனக்கு இரங்குவீரா? என லோத்து கேட்கின்றார். இறைவனின் பதில் உன்னதமான அவரது இரக்கத்தின் உள்ளத்தை வெளிப்படுத்துகின்றது. "இக்காரியத்திலும் உனக்கு கருணை காட்டியுள்ளேன். நீ கேட்டபடி அந்நகரை நான் அழிக்க மாட்டேன் நீ அங்கு விரைந்தோடித் தப்பித்துக்கொள். நீ அங்கு சென்று சேருமட்டும் என்னால் ஒன்றும் செய்ய இயலாது என்று உரைக்கின்றார் (தொநூ19:21-22) கருணை காட்டி காத்திருக்கும் கடவுள் கண்களை கசிய வைக்கின்றார். இறைவன் எவருடைய சாவிலும் இன்பம் காண்பதில்லை (எசே 18 : 32) என்ற இறைவாக்கின் விளக்க உரையாக இப்பகுதி இறைவனின் இரக்கத்தை படம் பிடிக்கின்றது.

தொடரும்...

# உங்கள் தந்தை / தாய் இரக்கம் உள்ளவராய் இருப்பது போல........



## லூக் 6:32

### இரக்கம் இறைவனின் விருப்பம்

" உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன்" (ஒசே6:6) எனும் வார்த்தைகள் கடவுளின் விருப்பம் இரக்கமே என்பதை தெளிவாக உணர்த்துகின்றன. பலி என்பது இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டின் மைய நிகழ்வாகும். நன்றி செலுத்த, வேண்டுதல் செய்ய, பாவ மன்னிப்பு கேட்க என அனைத்தும் பலி செலுத்துவதன் மூலமாகவே இறைவனை நோக்கி எழுப்பப்பட்டன. பலியே இறைவனுக்குப் புரிகின்ற, இறைவன் விரும்புகின்ற மொழி அல்லது வழி என்று நினைத்தனர். ஆனால் இறைவனோ இரக்கம் பலியைவிட உயர்ந்தது என்கிறார். இரக்கமே தன் விருப்பம் என்கிறார். "நீங்கள் காணிக்கை செலுத்த வருகிற போது உங்கள் சகோதர சகோதரிகளுக்கு உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள் பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்" (மத் 5:23,24) எனும் இறைவார்த்தைகளும் இரக்கமே பணியைவிட உயர்ந்தது என்றும், இரக்கமே இறைவனின் விருப்பம் என்றும் உணர்த்துகின்றன.

### இறை இரக்கம் அளவுகடந்தது

மத்தேயு நற்செய்தியில் நாம் வாசிக்கிற மன்னிக்க மறுத்த பணியாள் உவமை இறைவனின் இரக்கம் எவ்வளவு பெரிது, எல்லையற்றது என்பதை நயம்பட எடுத்துக் காட்டுகிறது (மத் 18:21-35) அரசர் ஒருவர் தம் பணியாளரின் 10000 தாலந்து கடனை மன்னிக்கிறார். மத் 18:24க்கான அடிக் குறிப்பு 10,0000 தாலந்து எவ்வளவு பெரிது என்பதை உணர்த்துகின்றது. ஒரு தாலந்து பொன் 1,80,000 தெனாரியத்துக்கு இணையானதாகும் அப்படியென்றால் அரசர் மன்னித்த கடனின் அளவு 1000 X 1,80,000 = 1,80,000,0000 தெனாரியம் ஆகும். ஆனால் மன்னிக்க மறுத்த பணியாளரோ வெறும் 100 தெனாரியத்தை மன்னிக்கவே முரண்டு பிடிக்கிறார். கடவுளின் இரக்கம் மனித இரக்கத்தோடு ஒப்பிடுகிறபோது மிகப் பெரிது, அளவுகடந்தது என்பதை உணர்த்தவே இயேசு இவ் உவமையைக் கூறுகிறார்.

### இரக்கம் கட்டாயமானது

இறை இரக்கம் இப்படி அளவுகடந்து பொழியப்படுகின்ற போது மனிதர்களும் இரக்கம் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும் என்று இறைவன் நினைப்பது, எதிர்பார்ப்பது இயல்பானதே. இரக்கம் என்பது இறைவனின் பார்வையில் விருப்பம் சார்ந்தது அல்ல; மாறாக கட்டாயமானது. செல்வந்தன் இலாசர் உவமையில் செல்வந்தனுக்கு தரப்படுகிற தண்டனை இதனை உணர்த்துகின்றது (லூக் 16:19-31). நரகத்தில் விழுந்து தாகத்தால் துடிக்கும் செல்வந்தன் இலாசரின் விரல் நனைத்து ஒருதுளி தண்ணீர் தர வேண்டுமென கேட்கிறான். ஆனால் அது தரப்படவில்லை. எண்ணிக்கை நூலில் வாசிக்கின்றோம். (எண் 20:1-13) கடின உள்ளம் கொண்ட, வாதாடுகிற, முறையிடுகிற, கீழ்படிய மறுக்கிற இஸ்ரயேல் மக்களுக்குக்கூட தாராளமாய் தண்ணீர் வழங்கப்படுகிறது. அதுவும் பாலைநிலைத்தில்! அதாவது, இஸ்ரயேல் மக்களின் இக்குற்றங்களை யெல்லாம் விட ஏழை இலாசருக்கு இரங்க மறுக்கிற செல்வந்தனின் குற்றமே மிகப் பெரிதாகப் பார்க்கப்படுகின்றது. இரக்கம் கட்டாயமானது என்றும் அவ்வாறு இரக்கம் காட்டப்படாத போது தண்டணை உறுதி என்றும் இறைவன் எச்சரிக்கின்றார்.

### செயலினின்று பழக்கமாக

இரக்கம் இறைவனின் விருப்பமானால் நமது விருப்பமாகவும் மாற வேண்டும். இறைவனின் இரக்கம் எல்லையற்றது என்றால் நமது இரக்கமும் எல்லையற்றதாக இருக்க வேண்டும். இறைவனின் பார்வையில் இரக்கம் விருப்பம் சார்ந்தது அல்ல; கட்டாயமானது என்றால் அதை ஏற்க வேண்டும். இன்று நம்மில் பலர் இறைவன் விரும்புகின்ற உள நிலையுடன் இரக்கச்செயல்கள் செய்கின்றோம் ஆனால் அத்தகைய இரக்கச்செயல்கள் இன்னும் முறைப்படுத்தப்பட வேண்டும். வாய்ப்பிருந்தால் செய்கிறோம், விரும்பினால் செய்கிறோம் என்பதைத் தாண்டி இரக்கச்செயல்கள் செய்வது ஒரு பழக்கமாக மாறவேண்டும். குறிப்பிட்ட உதவிகளைக் குறிப்பிட்ட நபர்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் செய்வேன் எனும் கட்டாயத்தை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்வது நாட்கள் செல்லும் போது இப்பழக்கம் நமது உயிரில் வேரூன்றி பணியாக மாற வேண்டும். அதுவே இரக்கத்தின் முதிர் நிலை.

### தனிமனித நிலையினின்று சமூகம் நோக்கி

தனி மனிதர்கள் மட்டுமல்ல இச்சமூகமும் இன்று நமது இரக்கத்தை எதிர்நோக்கியிருக்கிறது. பரந்த மக்கள் திரளும், இயற்கையும் கூட நமது இரக்கத்தை வேண்டுகின்றன. சமூக ஈடுபாடும், போராட்ட வாழ்வும், நீதிக்கான முயற்சிகளும் இயற்கை பாதுகாப்பு முனைவுகளும் கூட இரக்கச் செயல்களே.

இரக்கத்தின் ஆண்டில் சாதனைகள் தாம் வேண்டும் என்றில்லை நம்பிக்கையூட்டும் சில நல்ல தொடக்கங்கள் அமைந்தாலே போதுமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி

✳ கவிதை வரிகளை சரியாக 22 வரித்தாளில் வடிவமையுங்கள்
✳ மிகச் சிறயதாளில் வடிவமைத்தால் ஏற்றக்கொள்ளப்படமாட்டாது

Fr.Nc

இதோ கவிதை வரிகள்

☞ வானவர் கீதங்கள் பாடி மகிழ
☞ வந்ததே மண்ணிலே விடிவின் ஒளி
☞ மூன்று திசை ஞானிகளும் ஒன்று சேர
☞ வழிகாட்ட வானிலே தாரகையாம்
☞ மாடடைகுடிசையிலே மாபரனார்
☞ எல்லா மனத்திலும் நிலைத்து நின்றாரே
☞ ஏழ்மையின் கோலமே ஏற்று வந்தவர்
☞ மரியாளின் மகனாக வருகின்றாரே

இரு வரிகள் மட்டும் மாறி உள்ளன சரியாகக் கண்டுபிடித்து வடிவமையுங்கள்

கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி
1ம் இடம் 1500/=
2ம் இடம் 1000/=
3ம் இடம் 750/=

✳ எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
✳ குலுக்கல் மூலம் தெரிவு இடம் பெறும்

முடிவுத் திகதி 03.12.2016

## கிறிஸ்மஸ் சித்திரப் போட்டி

Fr.Nc

மாணவர்கள் தங்கள் திறமைகளைக் காட்டுங்கள்
இதோ கவிதை வரிகள்

காரிருள் மேகம் வானிலே
கடும்பனிக் குளிருமங்கே
மந்தைகள் தங்குமிடமே
மனுமகன் தேர்ந்த இடமாம்
வானவர் கீதங்கள் பாடவே
வந்து பிறந்தார் இயேசு
வானிலே தாரகை கண்டே
வருகின்றார் ஞானிகள் மூவரும்
மாமரி மைந்தனைக் கண்டே
மகிழ்ந்தே பூரித்து நின்றார்களே


01. கவிதை வரிகளை சித்திரமாய் வரையுங்கள்
02. A4 தாளில் வரையுங்கள்
03. அழகாய் வரைந்த சித்திரங்கள்
04. பெயர், முகவரி, பங்கு சித்திரத்துடன் இணைத்து அனுப்பவும்

1ம் இடம் 500/=
2ம் இடம் 300/=
3ம் இடம் 200/=

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15.12.2016


## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல்

➤ பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
➤ திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும் போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
➤ 1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
➤ 1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=




## கீழே தரப்பட்டுள்ள படங்கள் அல்லது படங்களில் உள்ள முதல் எழுத்தைக் கொண்டு விவிலிய வார்த்தைகளை கண்டு பிடியுங்கள்

உ+ம்:




✳ எல்லோரும் சரியாக வடிவமைத்தால் குலுக்கல்
✳ மூலம் தெரிவு இடம் பெறும்

1ம் இடம் 500/=
2ம் இடம் 300/=
3ம் இடம் 200/=

பெயர் ..........................................

முகவரி ..........................................

பங்கு ..........................................

முடிவுத் திகதி 15.12.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி மாணவருக்கான கவிதைப் போட்டி முடிவுகள்

### சரியான கவிதை வரிகள்



மறையறிவின் உயர்நிலைகள்
மனங்களில் இடம்பிடிக்க
வளமான எண்ணங்கள் ஒன்றாகியே
வாழ்வோடு இணைந்து அவை சுடர்வீசவே
இறைவழிகள் காட்டி விட்ட மறையறிவு
இறைவழியில் வாழவே துணைசெய்யுமே

பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும்

பங்குபற்றியவர்கள் : 28 பேர்
மிகச்சரியாக வடிவமைத்தவர்கள் 19 பேர்

### பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
**ஜெ. பெவன்**
**இல 93/49 நீதிமன்ற வீதி**
**திருகோணமலை**

**2ம் பரிசு 300/=**
**அ. ஜீவகாந்த்**
**ஜோசப்வாஸ் வீதி**
**பாலையூற்று**

**3ம் பரிசு 200/=**
**கொ நொயலின் பாத்லட்**
**இல 296, அன்புவழிபுரம்**
**திருகோணமலை**

### பாராட்டுக்குரியவர்கள்

01. சு. சுவேக்கா - பாலையூற்று
02. எஸ் ஏஞ்சல் - பாலையூற்று
03. ச. மொறிஸ் றெலா - பாலையூற்று
04. எஸ். ஜேம்ஸ் - பாலையூற்று
05. ஜெ. செல்டன் - பேராலயம்
06. டீ. ஜெரோம் - சிறிய குருமடம்
07. பி. பிரவீனா - குவாடலூப்பே
08. ஜோ. செமீரா - பேராலயம்
09. ஆன்வஜிரா - பேராலயம்
10.. சரோனா ஆர் எப் - பேராலயம்
11. ரி. ஜோண்சன் - பேராலயம
12. பியூலா ஆர் எப் - பேராலயம்
13. டானியலா ஆர் எப் - பேராலயம்
14. ஏ. நோயல் ராஜா - பாலையூற்று
15. தே. நந்தினி தேவி - சாம்பல் தீவு
16. ஜெ. பெவன் - சிறிய குருமடம்

# அகத்தின் அழகு

## கவிதைப் போட்டி முடிவுகள்
## சரியான எட்டு வரி கவிதை



மனமகிழ்வும் மன நிறையும்
முகமதிலே தெரிந்திடவே
இதயமது இன்பமதில்
இணைந்திருக்க வேண்டுமே
அகமதின் இன்பநிலை
அழித்து விடும் போது
முகமதனை முழுமையாய்
வெளிக்காட்டி நிற்குமே

***பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும்***
***பங்குபற்றியவர்கள் 14 பேர்***
***மிகச் சரியாக வடிவமைத்தவர்கள் 10 பேர்***

### பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
**சரோனா ஆர் எப்**
**இல 21/3 வித்தியாலயம் வீதி**
**திருகோணமலை**

**2ம் பரிசு 300/=**
**சுகத் ரஜி**
**பாலையூற்று**

**3ம் பரிசு 200/=**
**அ ஜீவகாந்த்**
**ஜோசேப் வாஸ் வீதி**
**பாலையூற்று**

### பாராட்டுக்குரியவர்கள்

01. எஸ் மொறிஸ்றெலா - பாலையூற்று
02. எஸ் ஜேம்ஸ் - பாலையூற்று
03. ஏ. நோயல் ராஜா - பாலையூற்று
05. டானியாலா ஆர். எப் - பேராலயம்
06. ஆன் வஜிரா ஆர். எப் - பேராலயம்
07. மேரி கிறிஸ்டினா. எல்டன் - அன்புவழிபுரம்
08. வேர்ஜினியா எல்டன் - அன்புவழிபுரம்

## தவறுக்கு வருந்துகிறோம்

ஒக்டோபர்மாத திருமலைத்தீபத்தில் சில தவறுகள் பிழைகள் இடம்பெற்றுள்ளது. அவற்றுக்கு மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர், பணியாளர்கள்
திருமலைத் தீபம்

# மறைக்கல்வி ரெயில் புதிர் போட்டி முடிவுகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சி | று | மி | ள | கு | ரு | வி | ற | கு |
| ச் | | கி | ரு | தா | ம் | பு | | ம் |
| கு | | வே | | | | த் | | பா |
| க் | | வி | | தி | | தி | | ட |
| தி | | ற | | த் | | ரி | | கி |
| த் | | து | | சி | ரா | கை | | ழ |
| சு | | த் | | | | | | வி |
| ஞ் | | | | | | | | ரு |
| ந | | வி | ர | பு | ர | பி | ம் | து |

**பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துகளும்.**

பங்குபற்றியவர்கள் 10 பேர்



### பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
**செல்வி ம. டெவோன்ஷா**
**இல:49 அந்தோனியார் வீதி**
**பாலையூற்று**

**2ம் பரிசு 300/=**
**செல்வன். தே. சமில்டன்**
**3ம் வட்டாரம்**
**நிலாவெளி**

**3ம் பரிசு 200/=**
**திருமதி காமலிற்றா விமலதாஸ்**
**இல: 31 இராஜவரோதயம் வீதி**
**திருகோணமலை**

### பாராட்டுக்குரியவர்கள்

01. ஆர். எமில்ராஜ் செல்வநாயகபுரம்
02. அ. கரோளினி பேராலயம்
03. ஆன்வஜிரா பேராலயம்
04. சு. சுவேக்கா பாலையூற்று
05. சு. கௌசல்யா பாலையூற்று
06. வி. சொய்ஸ்கிளின்டன் நிலாவெளி
07. ச. சகாயமேரி சாம்பல்தீவு

# மறைக்கல்வி கற்போம் – 21

01. உன் பெயர் பாறை இந்த பாறையின் மேல் என் திருச்சபையை கட்டுவேன் என்று இயேசு யாரைக் குறித்து கூறினார்?
பேதுருவை

02. திருச்சபையின் பிறந்தநாளை எப்போது கொண்டாடுகின்றோம்?
பெந்தகோஸ்தே பெருவிழா அன்று

03. பெந்தகோஸ்தே விழாவில் உள்ளடங்கிய கருப்பொருள் என்ன?
கடவுள் இஸ்ராயேல் மக்களுடன் ஏற்படுத்திய உடன்படிக்கை நினைவு
கடவுள் மோசேயிடம் கட்டளைகளை வளங்கியதை நினைவூட்டுகிறது
அறுவடை விழாவில் இறைவனுக்கு நன்றி சொல்வதை நினைவுபடுத்துகிறது.

04. கத்தோலிக்கம் என்பதன் பொருள்?
முழுமை, பொதுமை, உலகளாவிய என்று பொருள்

05. மறைமாவட்டம் என்றால் என்ன?
குருக்களின் தோழமையுடன் மேய்ப்புப்பணிக்காக ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களின் ஒரு பகுதியே

06. ஆயர்களை இருவகையாக பிரிக்கலாம் அவை எவை?
மறைமாவட்ட ஆயர்கள், பட்டம் சார்ந்த ஆயர்கள்

07. திருத்தூதர்களின் வழிவரும் திருச்சபையின் மேய்ப்பர்களை எவ்வாறு அழைக்கலாம்?
ஆயர்கள்

08. பல மறைமாவட்டங்களை கொண்ட ஒரு பகுதி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
உயர் மறைமாவட்டம்

09. உயர் மறைமாவட்ட ஆயர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?
பேராயர்

10. பொதுநிலையினர் என்போர் யார்?
திருமுழுக்கின் வழியாக கிறிஸ்தவ சபையிலும் கிறிஸ்துவின் மறையுடலிலும் அங்கத்தினராக இணைக்கப்பட்ட கத்தோலிக்க கிறிஸ்தவர்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வு சமூகம் ஆன்மீக சமூக பணிகளுக்காக நடாத்திய அதிஸ்ட லாபசீட்டிழுப்பின் குலுக்கல் நிகழ்வு







# இறை இரக்கம்






இரக்கம் என்பது பாவப்பட்டவருக்கு காட்டும் பரிவு. பலவீனப் பட்ட ஒரு மனிதனுக்கு தகுதியில்லாத ஒரு மனிதனுக்கு வேறேதும் வழியின்றி நிலை குலைந்த மனிதனுக்குத் தானாக ஒருவர் முன்வந்து உதவிக்கரம் நீட்டி மீட்பது இரக்கம். இரக்கம் பரிதாபம் அல்ல. இரக்கம் அன்பைக் காட்டும் ஒரு மனிதச் செயல்பாடு. இரக்கம் என்ற பண்பு இனிமையான பண்பு. அது கடவுளின் உயரிய பண்பு. நம் திருத்தந்தை பிரான்சிசும் **“மானிட வரலாறு முழுவதும் கடவுள் எப்பொழுதும் அன்மையில் இருப்பவராக, பராமரிக் கிறவராக, தூயவராக மற்றும் இரக்கம் உடையவராக இருக்கின்றார்”** என்றுரைக்கின்றார். எனவே கடவுளின் பெயர் **“இரக்கம்”** என்றும் **“இறைதந்தையின் இரக்கத்தின் திருமுகம் இயேசு”** என்றும் இயேசு கிறிஸ்துவுக்குப் பெயர் சூடி மகிழும் திருத்தந்தை பிரான்சிஸ் பாராட்டுக்குரியவர்.

**நன்றி: தோழன்**

# மனமார வாழ்த்துகிறோம்!



எமது நிறுவனத்தில் பொதுசன தொடர்பாடல் உத்தியோகஸ்தராகப் பணியாற்றிவரும் திரு. சந்தியாகுபிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்கள் இலங்கை மத்தியஸ்த சபை ஆணைக் குழுவால் நடாத்தப்பட்ட மத்தியஸ்தர்களுக்கான படைப்புப் போட்டித் தொடரில் குறுநாடகப் போட்டிப் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட படைப்புக்காக அகில இலங்கை மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்று கடந்த 2016.11.09 ஆம் திகதி அலரி மாளிகையில் அதிமேதகு ஜனாதிபாதி மைத்திரிபால ஸ்ரீ சேன அவர்களின் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் அதற்குரிய நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டார்.

**வாழ்த்துவோர்**
**பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள்**
**எகெட் கரித்தாஸ்**
**திருகோணமலை**

# 52வது நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 1915 | | 1964 |
| 06 |  | 08 |
| 17 | | 07 |

## அருட்தந்தை சைமன் அருளப்பா இ.ச

திருகோணமலை தூய மரியாள் பேராலயத்தை சேர்ந்தவர் இவர் இயேசு சபை துறவியாவார் 17.06.1935 இந்தியாவில் குருப்பட்டம் பெற்றார்.

நிலாவெளி தூய சூசையப்பர் ஆலயத்தை கட்டியவரும், நிலாவெளி தூய சூசையப்பர் பாடசாலையை ஆரம்பித்தவரும் இவரே. இவர் நிலாவெளியில் பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார்.

**....இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவோம்.....**

# நிலாவெளி றோமன் கத்தோலிக்க பாடசாலை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2016




# 10ம் ஆண்டு நினைவஞ்சலி

| உதித்தது | | மறைந்தது |
|---|---|---|
| 14 | | 07 |
| 06 |  | 12 |
| 1985 | | 2006 |

## B. பேனாட் கிங்ஸ்லி

10 ஆண்டுகள் கடந்து சென்றாலும் எம் நெஞ்சங்களை விட்டு நீங்காத நினைவுகள் அவரது ஆன்ம சாந்திக்காகவும் இவர் உயிர்த்தெழும் நாளில் விண்ணரசில் இவர் உயர்த்தெழும் நாளில் விண்ணரசில் சேர இறைவன் வேண்டி நிற்கும்.

பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.
தகவல் பெற்றோர்
45/10 8ம் வட்டாரம்
இலுப்பைகுளம், சாம்பல்தீவு

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி



தி/ நிலாவெளி றோ.க.த.க பாடசாலையைச் சேர்ந்த செல்வன் தே. சமில்டன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதல் மாணவனாகவும், மாவட்டத்தில் 25வது இடத்தையும் பெற்றுள்ளார்.

இவர் திரு தேவராஜன் ~ இந்திராணி என்பவர்களின் புதல்வன் ஆவார். இவரைக் கற்பித்த ஆசிரியரையும், இவர் பாடசாலைக்கு பெருமை சேர்த்தமைக்காகவும் பாராட்டி நிற்பதோடு இவர் கல்வியில் மென்மேலும் சிறந்து விளங்க வாழ்த்தி நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org